| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| முனைவர்.பூ.ஆ.நரேஷ்,<br>இணை இயக்குநர் (பணியாளர்),<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்<br>மற்றும் இணை இயக்குநர்(கல்வி),<br>பாண்டிச்சேரி |

**ந.க.எண். 015312 /பி3 / 2023** **நாள் :11 .01.2024**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – இடைநிலைப் பள்ளி விடுப்பு சான்றிதழ் பொதுத்தேர்வு– மார்ச் / ஏப்ரல் 2024 – தேர்வுமையங்கள் பட்டியல் சரிபார்த்தல் – சில அறிவுரைகள் வழங்குதல் – சார்பாக.

**பார்வை:**

1. புதிய தேர்வு மையம் கோரி தங்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள்.
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள். 26.12.2023

******

பார்வை 1–ல் காணும் தங்களது கருத்துருக்களின் அடிப்படையில், மார்ச் / ஏப்ரல் 2024 இடைநிலை பொதுத்தேர்வுக்கு, தங்கள் மாவட்டத்தில் புதிய தேர்வு மையமாக/மையங்களாகத் தேர்வு செய்யப்பட்ட பள்ளிகளின் விவரங்கள் பார்வை 2–ல் காணும் கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு வரை இடைநிலை தேர்வுக்காக தேர்வு மையங்களாக செயல்பட்ட பழைய தேர்வு மையங்களுடன், இவ்வாண்டு புதிதாக அனுமதிக்கப்பட்ட புதிய தேர்வு மையங்கள், தேர்வு மைய மாற்றம் கோரி பெறப்பட்ட பள்ளிகள் மற்றும் மார்ச் / ஏப்ரல் 2024–ல் முதன்முறையாக இடைநிலை பொதுத் தேர்வெழுத அனுமதிக்கப்பட்ட புதிய பள்ளிகள் (NEW SCHOOLS) என அனைத்தையும் சேர்த்து, மார்ச் / ஏப்ரல் 2024 இடைநிலைக் தேர்வுக்கான **கல்வி மாவட்ட வாரியான தேர்வு மையங்கள் மற்றும் இணைப்புப் பள்ளிகளின் பட்டியல் மின்னஞ்சல் வழியாக இக்கடிதத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அப்பட்டியலினை மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பி தேர்வு மையங்கள் / இணைப்பு பள்ளிகள்** <u>உட்பட அனைத்தும் சரியாக உள்ளதா என்பதனை</u> **மாவட்டக் கல்வி அலுவலர்கள்** <u>உறுதி செய்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.</u>

மேற்காண் **பட்டியலில் திருத்தங்கள் ஏதேனும் இருப்பின்,** அதனை மாவட்டக் கல்வி அலுவலர்கள் **கருப்பு மையினால் மட்டுமே உரிய தேர்வுமையத்திற்கு கீழே குறிப்பிட வேண்டும்.** திருத்தங்கள் ஏதும் இல்லை எனில் **Correction Nil** என குறிப்பிட்டும் **திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பக்கங்கள் உட்பட அனைத்து பக்கங்கள் மற்றும் இத்துடன் இணைத்து அனுப்பப்படும் சான்றிதழ் ஆகியவற்றில் மாவட்டக் கல்வி அலுவலரின் கையொப்பம் பெற்று, அதனை ஸ்கேன் செய்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்** இவ்வலுவலகத்திற்கு <u>dgeb3sec@gmail.com</u> என்ற மின்னஞ்சல் முகவரிக்கு **18.01.2024 அன்று மாலை 05.00 மணிக்குள்** அனுப்பிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், மார்ச் / ஏப்ரல் **2024–ல்** நடைபெறவுள்ள இடைநிலை பொதுத் தேர்விற்கு தங்கள் மாவட்டத்தில் இடைநிலை பொதுத் தேர்வு எழுதவுள்ள எந்தவொரு பள்ளியும் விடுபடாமல் அனைத்துப் பள்ளிகளுக்கும் தேர்வுமையங்கள் ஒதுக்கப்பட்டுள்ளனவா என்பதையும் (Cancellation Centre தவிர) **இடைநிலை தேர்வு மையங்களாக செயல்படும் அனைத்து பள்ளிகளும் தேர்வின் சமயம் அங்கீகாரம் பெற்றிருப்பதையும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்** என அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் **18.01.2024** தேதிக்குப் பிறகு பெறப்படும் எந்த ஒரு திருத்தமும் (பள்ளியின் பெயர், இணைப்புப்பள்ளி மாற்றம்) ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதையும், தேர்வுமைய பட்டியலில் திருத்தங்கள் ஏதேனும் பின்னர் கண்டறியப்படின் அதற்கு மாவட்டக் கல்வி அலுவலரே முழுப் பொறுப்பேற்க வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஒம்/–**
**இணை இயக்குநர் (பணியாளர்)**

**இணைப்பு :** சான்றிதழ்

**நகல் :**
**1 .அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்**
(முதன்மைக் கல்வி அலுவலரை தொடர்பு கொண்டு இப்பணியினை குறிப்பிட்ட தேதிக்குள் முடிக்க ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்).
**2.**அனைத்து அரசுத் தேர்வு உதவி இயக்குநர்கள் – தகவலுக்காக

# <u>சான்றிதழ்</u>

1. தேர்வு மையப்பட்டியலில் அனைத்து தேர்வு மையங்களும் இடம் பெற்றுள்ளன.

2. தேர்வுமையப் பட்டியலில் தேர்வு மையங்களும், அவற்றின் இணைப்பு பள்ளிகளின் விவரங்களும் விடுதல் இன்றி இடம் பெற்றுள்ளது.

3. தேர்வு மையப்பட்டியலில் மூடப்பட்ட பள்ளிகள் மற்றும் இரத்து செய்யப்பட்ட தேர்வு மையங்கள் நீக்கப்பட்டுள்ளது.

4. தேர்வுமையப் பட்டியலில் அங்கீகாரம் பெற்ற எந்த ஒரு பள்ளியும் விடுபடவில்லை. அங்கீகாரம் பெறாத எந்தவொரு பள்ளியும் இடம்பெறவில்லை

5. ஒவ்வொரு தேர்வுமையத்திலும் தேர்வு நடத்துவதற்கு போதுமான தேர்வறைகள், போதுமான தளவாடங்கள் மற்றும் இருக்கை வசதிகள் உள்ளன என சான்றளிக்கிறேன்.

மாவட்டக் கல்வி அலுவலரின் கையொப்பம்

(அலுவலக முத்திரையுடன்)